# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.29/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.7 |
| Name | : | வேணியம்மாள் |
| Father’s Name | : | க.பெ.பாலகிருஷ்ணன் |
| Village | : | குடியாத்தம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 67 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 29.04.2026.

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். காவல் ஆய்வாளர் பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் இதற்கு முன்பு வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 11.12.2016ம் தேதி அ.சா.1 கொடுத்த புகாரின் பெற்று சி.எஸ்.ஆர் எண்.192/2016 வழங்கி பின்பு எனக்குகீழ் பணிபுரிந்துவந்த ராஜேஸ்வரி என்பவரிடம் வழக்கினை பதிவு செய்து புலன்விசாரணை செய்ய பணித்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் நான் பதிவு செய்த சி.எஸ்.ஆர்.எண். யார் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் வாதி ஸ்ரீதேவி என்பவர் கொடுத்த புகாரின்பேரில் சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டது. வாதி ஸ்ரீதேவி புகார் கொடுக்க வந்தபோது அவருடன் யார் யார் உடன் வந்தார்கள் என்றால் அவரது அம்மா மற்றும் அப்பா வந்தனர். வாதி கொடுத்த புகாரின்பேரில் விசாரணை ஏதும் செய்தேனா என்றால் செய்யவில்லை சி.எஸ்.ஆர் மட்டும்தான் பதிவு செய்தேன். அதேபோல் இவ்வழக்கின் 1ம் எதிரி வீரராகவன் என்பவர் வாதி ஸ்ரீதேவியின்மீது புகார் கொடுக்கப்பட்டு அதற்கும் நான்தான் சி.எஸ்.ஆர் வழங்கினேன் என்றால் சரிதான். வாதியின்மீது பதிவு செய்யப்பட்ட சி.எஸ்.ஆரின் பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்காததற்கு குறிப்பாக காரணம் எதுவும் கூறமுடியுமா என்றால் நான் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் சி.எஸ்.ஆர் வழக்கு கோப்பினை காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டேன். எதிரிகள் கொடுத்த உண்மை புகாரை மறைத்து எதிரிகள்மீது வாதி கொடுத்த புகாரின்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் இவ்வழக்கில் குற்றவாளிகள் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.